2018 மே 30]

மிகவும் நன்றாக இருக்கும். எனவே, இதனைக் கருத்தில்கொண்டு எனது கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கின்ற அந்த இடம் காலியாக இருக்கும்பட்சத்தில், அங்கு நீதிமன்ற வளாகம் தேவைப்படுகின்றபட்சத்திலே, உயர் நீதிமன்றத்தின் மூலமாக உரிய கருத்துரு பெறப்பட்டு, அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 85, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. தமிழ்ச்செல்வன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

85—

தரம் உயர்த்துதல்

***14020—திரு. ரா. தமிழ்ச்செல்வன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பலூர் தொகுதி, பெரம்பலூர் ஒன்றியம், எளம்பலூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) பொதுவாக கிராமப்புறங்களில் இருக்கக்கூடிய ஆரம்ப சுகாதார நிலையங்களை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்துகின்ற அற்புதமான திட்டத்தை நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்

தலைவி அம்மா அவர்கள் தொடங்கி வைத்தார்கள். தற்பொழுது 385 ஒன்றியங்களிலும், ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையில் 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனைகளாக அவை தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றன. அந்தவகையிலே, ஏற்கெனவே பெரம்பலூர் ஒன்றியத்தில், அம்மாபாளையத்தில் பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் செயல்படுவதால், வருங்காலத்திலே தேவையின் அடிப்படையில், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிட்டிருக்கிற எளம்பலூர் ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. தமிழ்ச்செல்வன் அவர்கள்.*

திரு. ரா. தமிழ்ச்செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாற்றம் தந்த மக்களுக்கு ஏற்றமிகு ஆட்சியினைத் தந்து, தமிழ்நாட்டு மக்களின் உள்ளங்களிலும், இல்லங்களிலும் என்றும் நீக்கமற வாழ்ந்துகொண்டிருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களினுடைய நிழலாய், நிஜமாய், திடமாய், தீர்க்கமாய், துறைகள் தோறும் திட்டங்களை அள்ளித் தந்து கொண்டிருக்கிற வான்மேகம் போன்ற எங்கள் ஏற்றமிகு முதல்வர் அய்யா எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன்.*

பெரம்பலூர் ஊராட்சி ஒன்றியம், எளம்பலூர் ஆரம்ப சுகாதார நிலையம் தேசிய நெடுஞ்சாலையில் அமைந்திருக்கிற ஆரம்ப சுகாதார நிலையமாகும். அது திருச்சி—சென்னை தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது. அடிக்கடி பெரும் விபத்துகள் ஏற்படுகிற சூழ்நிலையில், 8 கிலோ மீட்டர், 10 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கிற மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைக்கு விபத்தில் சிக்கியவர்களைக் கொண்டு செல்கிறபோது-golden time *என்று சொல்வார்கள், அப்படிப்பட்ட நேரத்திற்குள் கொண்டு செல்ல முடியாமல் மரணங்கள் நிகழ்கின்றன. இதுபோன்று ஏற்படுகிற மரணத்தைத் தடுக்கிறவகையில், மாண்புமிகு அமைச்சர் பெருமகனார் அவர்கள், இந்த ஆண்டே அதனைத் தரமுயர்த்தப்பட்ட, மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக உயர்த்தித் தருவாரா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

2018 மே 30]

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினருடைய கோரிக்கையின்படி, வருங்காலத்தில் ஊரக சுகாதாரச் சேவைகளை மேம்படுத்துவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் தற்போது 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனைகளாகத் தரமுயர்த்தப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தேசிய நெடுஞ்சாலைகளில் அதிகமாக விபத்துகள் நடப்பதாகக் குறிப்பிட்டார். அந்த அடிப்படையிலே,* Accident and Trauma Care Centres-*விபத்து காய சிகிச்சை மையங்களை அதுபோன்ற இடங்களிலே வருங்காலத்திலே அமைப்பதற்குரிய ஆய்வுகள் துறைரீதியாக மேற்கொள்ளப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்காக பணிவோடு ஒரு கருத்து. 108* Ambulance *சேவையை எடுத்துக்கொண்டால்* national level—*லே, அதாவது இந்திய அளவில் 17 நிமிடங்கள் ஆகின்றன. விபத்து நடந்த இடங்களிலிருந்து ஆம்புலன்ஸ் வருவதற்கு 17 நிமிடங்கள் ஆகின்றன. தமிழ்நாட்டில் மட்டும்தான், உலக அளவிற்கு இணையாக அது 8.32 நிமிடமாக இந்த ஆண்டு உள்ளது. இந்த ஓராண்டிலே நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்கள் புதிய ஆம்புலன்ஸ்களைக் கொடுத்து, புதிய 108 அவசர செயலிகளை* G.P.S. *கருவிகளை எல்லாம் அமைத்துக் கொடுத்திருக்கிற காரணத்தால், இன்றைக்கு மெட்ரோவிலே, சென்னையிலே அது 8.32 நிமிடங்களாகவும், ஊரகப் பகுதிகளிலே 13.30 நிமிடங்களாகவும் இருக்கிறது. அந்த அளவிற்கு ஒரு மகத்தான சாதனையை இன்றைக்கு நாங்கள் படைத்திருக்கிறோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த* Golden hour-*ஐ தாண்டி,* Platinum hour-*லே இன்றைக்கு உயிர்கள் காக்கப்பட்டிருக்கின்றன; இறப்பு சதவீதமும் குறைக்கப்பட்டிருக்கின்றது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. தமிழ்ச்செல்வன் அவர்கள்.*

திரு. ரா. தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பு மாற்று அறுவைச் சிகிச்சையானாலும், அதில் தமிழகம்தான் முதலிடம். பச்சிளங் குழந்தைகளுக்கான தீவிர சிகிச்சைப் பிரிவானாலும் தமிழகம்தான். இப்படி மருத்துவத் துறையிலே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, அய்யா எடப்பாடியார் அவர்களுடைய அரசு பீடுநடை போட்டு, இந்தியத் திருநாட்டில் முதன்மைத் துறையாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கும் இந்த வேளையில், நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் பெருமகனார் அவர்களிடத்திலே பணிந்து ஒன்றைக் கேட்டுக்கொள்கிறேன். தொடர்ந்து இந்த அவையிலே நான் எழுப்புகிற ஒரு வினா இது. ஆலத்தூர் வட்டம் என்பது புரட்சித் தலைவி அம்மாவால் உருவாக்கப்பட்ட புதிய வட்டமாகும். அங்கே தேனூர் என்கிற ஊராட்சி, 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட ஊராட்சியாகும். அருகிலே 20—க்கும் மேற்பட்ட குக்கிராமங்களையும் அது உள்ளடக்கியிருக்கிறது. ஆக மொத்தம் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் தொகையைக் கொண்ட அந்த ஊராட்சியில், புதிய ஆரம்ப சுகாதார நிலையத்தை அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்கள், இந்த ஆண்டு மட்டுமே 30 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களைத் திறந்து வைத்திருக்கிறார்கள். இந்த 7 ஆண்டுகளில் அம்மா அவர்களுடைய ஆட்சியில் தொடர்ந்து ஒரு வரலாற்றுச் சாதனையாக 254 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்பட்டு, திறக்கப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையையும் வருங்காலத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.டி. வெங்கடாச்சலம் அவர்கள்.

2018 மே 30]

திரு. என்.டி. வெங்கடாச்சலம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னை வாழ வைத்த தெய்வம், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிவோடு வணங்குகிறேன். மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். எங்களுடைய ஈரோடு மாவட்டத்தில் உள்ள பெருந்துறை தாலுகா மருத்துவமனையானது, 40 கிலோ மீட்டர் தொலைவில் நான்கு வழிச் சாலைகளே அதிகமாக இருக்கக்கூடிய பகுதியில் அமைந்திருக்கிற ஓர் அரசு மருத்துவமனை. இந்த மருத்துவமனை அமைக்கப்பட்டு 25 ஆண்டுகளாகின்றன. இந்த 25 ஆண்டுகளில் வேகமாக மக்கள் தொகை பெருகி வருகிறது. அதே சதவீத அளவிலே நோய்களும் அதிகரித்துக் கொண்டு வருகின்றன. மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசும் இதைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளைத் தொடர்ந்து எடுத்து வருகிறது. இருந்தாலும்கூட, 25 ஆண்டுகளுக்கு முன்பாக என்ன கட்டமைப்பு வசதிகள் எங்களுடைய மருத்துவமனையில் இருந்தனவோ, அதே கட்டமைப்பு வசதிகள்தான் தற்போதும் இருக்கின்றன. சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், நான்கு வழிச் சாலைகளிலே அதிகமாக விபத்துகள் ஏற்படுகின்றன. இப்போதுதான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். விபத்தில் பாதிக்கப்பட்டவர்களை உடனடியாக,* Golden hour *என்று சொல்லக்கூடிய* hour*—லே மருத்துவமனைக்குக் கொண்டு செல்கிறபோது உயிர்கள் காப்பாற்றப்பட்டிருக்கின்றன என்று சொன்னார். நான்கு வழிச் சாலையிலே அமைந்திருக்கக்கூடிய அந்த அரசு மருத்துவமனையிலே,* Accident and Trauma Care Centre *என்று சொல்லக்கூடிய விபத்து சிகிச்சைப் பிரிவு இன்னும் ஏற்படுத்தப்படாமல் இருக்கிறது. அதேபோல, விபத்துகள் ஏற்படுகிறபோது, அதிகமான தருணங்களில் எலும்பு முறிவுதான் ஏற்படுகிறது. ஆகவே, அந்த எலும்பு முறிவுக்குண்டான சிகிச்சையை எடுத்துக்கொள்ளக்கூடிய வசதிகள் எங்களுடைய மருத்துவமனையில் இல்லை.*

முற்பகல் 10-35

ஆகவே, மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள், புதுக்கோட்டை செல்கிறபோது, சிறியவனான என்னுடைய வேண்டுகோளை ஏற்று, ஒரு முறையாவது எங்கள் பெருந்துறை பகுதிக்கு வந்து, இந்த மருத்துவமனையையும் நேரடியாகப்

பார்வையிட வேண்டும். நான்கு வழிச் சாலைகளில் இருக்கிற மருத்துவமனைகளிலெல்லாம் உடனடியாக Accident and Trauma Care Centre அமைப்பதற்குண்டான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அதேபோல, எலும்பு முறிவு சம்பந்தமான சிகிச்சைகளை மேற்கொள்ளக்கூடிய வகையில் சிகிச்சை முறைகளை இப்படிப்பட்ட மருத்துவமனைகளில் அமைக்கிறபோதுதான் Golden hour என்று சொல்லக்கூடிய அந்த நேரத்தில், விபத்தினால் ஏற்படக்கூடிய உயிரிழப்பைத் தடுக்கக்கூடிய ஒரு சூழ்நிலையை நாம் உருவாக்க முடியும். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அதைச் செய்ய முன்வருமா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுவது, பொதுவாக ஒரு முக்கியமான பிரச்சினை. அதற்காகதான் கடந்த ஆண்டு சட்டமன்றக் கூட்டத் தொடரின்போது, நம்முடைய சுகாதாரத் துறைக்கென்று ஒரு புதிய விபத்துக் காயக் கொள்கை வகுக்கப்படும் என்று மானியக் கோரிக்கையில் அறிவித்தோம். அதனடிப்படையில் இந்த ஆண்டு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 190 கோடி ரூபாயில், 72 இடங்களில் Accident and Trauma Care Centres-ஐ இன்றைக்கு அமைத்துக் கொடுத்து, Tamil Nadu Accident and Emergency Care Initiative— TAEI என்ற ஓர் அற்புதமான திட்டத்தைக் கொடுத்து, இப்போது அதை வடிவமைத்து, அதன் முதற்கட்டமாக, சென்னை அரசு மருத்துவக் கல்லூரியில் தொடங்கியிருக்கின்றோம். படிப்படியாக தமிழ்நாடு முழுவதும் மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுவது போன்று, எங்கெல்லாம் இதுபோன்ற விபத்துகள் அதிகமாக நடக்கின்றனவோ, எங்கெல்லாம் பொது மக்களுக்கு அவசர சிகிச்சை தேவைப்படுகிறதோ, தேவையின் அடிப்படையில் அதை விரிவுபடுத்தவிருக்கின்றோம். ஆகவே, அப்படி விரிவுபடுத்துகின்றபோது, இந்த ஆண்டில் மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற பெருந்துறைக்கு முக்கியத்துவம் வழங்கிட, ஆவன செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

2018 மே 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ.கே.என். ராமஜெயலிங்கம் அவர்கள்.*

திரு. ஜெ.கே.என். ராமஜெயலிங்கம்: *மண்ணை விட்டு மறைந்தாலும், மக்கள் மனதை விட்டு மறையாமல், தமிழர்களுடைய நெஞ்சங்களிலெல்லாம் நீக்கமற நிறைந்திருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே, கொள்கையிலே ஓர் எள் முனையும்கூட பிறழாமல் நல்லாட்சி நடத்திக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களையும் வணங்கி, அந்த நல்லாட்சிக்குத் துணையாக நிற்கின்ற மாண்புமிகு துணை முதல்வர் அவர்களையும் வணங்குகின்றேன்.*

நடுநிலை தவறாமல் பணியாற்றி வருகின்ற மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனைக்கு தினசரி 2,000 புற நோயாளிகள் வந்து கொண்டிருக்கின்றனர். இன்னும் சொல்லப்போனால், மாவட்ட மருத்துவமனையைவிட மிக அதிக புற நோயாளிகள் ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனைக்குத்தான் வந்து கொண்டிருக்கின்றனர். எனவே, ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனையைத் தரமுயர்த்த வேண்டுகிறேன். அதைப்போல அந்தப் பகுதியில் விபத்துகள் தினசரி நடைபெறுகின்றன. விபத்தில் பாதிக்கப்பட்டவர்கள் ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனைக்கு அதிகளவில் வந்து கொண்டிருக்கின்றனர். கடந்த ஆண்டே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கு ஒரு Ortho *டாக்டரை நியமனம் செய்வதாக உறுதியளித்தார்கள். எனவே, ஒரு புதிய அரசாணைமூலம் அதற்கான பணியிடத்தை உருவாக்கி, ஒரு* Ortho *டாக்டரை ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனைக்கு நியமனம் செய்யுமாறு இந்தத் தருணத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.*

அதேபோல, ஆண்டிமடத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் உள்ளது. இப்போது ஆண்டிமடம் தாலுகா தலைநகரமாக அறிவிக்கப்பட்டு, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டு, இன்றைக்குச் செயல்பட்டு வருகிறது. எனவே, ஆண்டிமடம் தாலுகா தலைநகரமானதால், ஆண்டிமடத்திலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை தாலுகா மருத்துவமனையாகத் தரமுயர்த்த வேண்டி மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கடந்த ஆண்டு இரண்டு கோரிக்கைகளைச் சொல்லியிருந்தார்கள். ஒன்று;* Ortho Doctor *வேண்டுமென்ற கோரிக்கை; இன்னொன்று; மகப்பேறுக்கு புதிய* CEmONC Centre *அமைக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருந்தார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தங்களுடைய தொகுதியில் ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனைக்கு 20 கோடி ரூபாயை இந்த ஆண்டு ஒதுக்கி, ஒரு புதிய* CEmONC Centre-*ஐ கொடுத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்போன்று, வருங்காலத்தில் தாங்கள் குறிப்பிடுகின்ற ஆண்டிமடத்திலுள்ள மருத்துவமனையைத் தரமுயர்த்தவும் மற்றும் ஜெயங்கொண்டத்தில் புதிய மருத்துவர்களை நியமனம் செய்திடவும் அரசு ஆவன செய்யும். மருத்துவர்கள் நியமனம் எல்லாம் ஒரு காலத்திலே எட்டாக் கனியாக இருந்தது. இப்போது அந்த நிலையை மாற்றி, மருத்துவர்களுடைய நியமனத்திலே மிகப் பெரிய வரலாற்று சாதனை நிகழ்த்தப்பட்டிருக்கிறது. 10,000—க்கும் மேற்பட்ட மருத்துவர்களை நியமனம் செய்து மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு சாதனை படைத்திருக்கின்றது. எனவே, தாங்கள் குறிப்பிடுகின்ற பகுதிகளிலும் அரசு ஆவன செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. சந்திரபிரபா அவர்கள்.*

திருமதி மு. சந்திரபிரபா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்தும் மறையாமல் மக்கள் மனதில் நீங்காமல் நிலைத்திருக்கும் மாண்புமிகு அம்மா எனும் தெய்வத்தை முதற்கண் வணங்குகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியோடு, சிறப்பான முறையில் ஆட்சி புரிந்துவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்கி, எங்கள் மாவட்ட அமைச்சர் அண்ணன் மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.*

2018 மே 30]

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயிருப்பு ஒன்றியம், மகாராஜபுரம் மக்கள்தொகை நிறைந்த பகுதியாகும். மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, எப்போதுமே மக்கள் நலன்மீது மிகுந்த அக்கறை கொண்டுள்ள அரசாகும். சுகாதாரத் துறையிலே சிறந்து விளங்கும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, மகாராஜபுரத்தில் ஓர் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க உதவிடுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துறைரீதியாக உடனடியாக ஆய்வு செய்து, சாத்தியக்கூறுகளின் அடிப்படையில் அரசு ஆவன செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 86, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம், மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.*

86—

அலுவலகத்திற்குக் கட்டடம்

***3764—திரு. எஸ். சுதர்சனம்:**

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாதவரம் தொகுதி, மாதவரம் சார்-பதிவாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, வணிக வரித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) வடசென்னை பதிவு மாவட்டத்தின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கிவரும் மாதவரம் சார்-பதிவாளர்